Reg. No. |  |  |  |  |  |  |

# பத்தாம் வகுப்பு–காலாண்டுப் பொதுத் தேர்வு–2018

நேரம் : 2:30 மணி) **தமிழ் – இரண்டாம் தாள்** (மொத்த மதிப்பெண்கள் : 100

LANGUAGE-PART-I- TAMIL -PAPER II

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

அறிவுரை: (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப்பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும், அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு நிற மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

(iii) வினா எண் 38க்கு உரிய படிவம் வழங்கப்படும். அதனை பூர்த்தி செய்யவும்

பிரிவு – I (மதிப்பெண்கள்: 20) அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : பகுதி–1 5 × 1=5

1. ஈற்றில் ஐகாரம் குறைந்து வந்த சொல் (அ) திண்ணை (ஆ) வளையல் (இ) ஐந்து
2. கீழ்வருவனவற்றுள் வினையெச்சத் தொடரை எடுத்து எழுதுக
   (அ) சென்று கேட்டான் (ஆ) படித்த கயல்விழி (இ) ஆடினான் பாடினான்
3. பாம்பு சரசரவென ஊர்ந்தது – இதில் சரசர என்பது
   (அ) அடுக்குத்தொடர் (ஆ) இரட்டைக்கிளவி (இ) ஒருபொருட் பன்மொழி
4. சோறு உண்டான் என்பது (அ) வெளிப்படைச் சொல் (ஆ) இனங்குறித்தல் (இ) குறிப்புச் சொல்
5. மேற்கு + நாடு என்பது ........... எனச் சேரும். (அ) மேற்கு நாடு (ஆ) மேநாடு (இ) மேனாடு

கோடிட்ட இடத்தை நிரப்புக : பகுதி–2 5 × 1 = 5

6. சார்பெழுத்துகள் ......... வகைப்படும்
7. வந்தான் – இவ்வினைமுற்றின் பகுதி ........ ஆகும்
8. எழுத்திலக்கணத்திற்கும் சொல்லிலக்கணத்திற்கும் நாம் பயிலும் இலக்கண நூல்
9. உவமையை ஏற்கும் பொருளுக்கு .......... என்று பெயர்
10. ஒரு எழுத்து தனித்து நின்று பொருள் தருவது

சுருக்கமாக விடையளிக்க : பகுதி–3 10 × 1 = 10

11. சுட்டெழுத்தின் பின் வல்லினம் மிகும் என்பதற்குச் சான்று தருக
12. கவனமாகப் படி – எவ்வகைத் தொடர் ?
13. சந்திப்பிழை நீக்குக: இரண்டு நாள்கள் விடுமுறை வழங்குமாறுத் தாழ்மையுடன் வேண்டி கொள்கிறேன்.
14. ஒருமைப் பன்மைப் பிழையை நீக்குக : இது பொதுவழி அல்ல
15. தொகைச் சொல்லை விரித்து எழுதுக : ஐம்புலன்
16. வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக : மழபேஞ்சாத் தானே வெள்ளாமை செழிக்கும் ?
17. உருவகத்தை உவமையாக மாற்றுக : புருவவில்
18. கீழ்க்காணும் தொடரில் அமைந்துள்ள பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக
    அந்த டப்பிங் படத்தோட டைரக்டர் யார் ?
19. இளமைப் பெயர்களைப் பொருத்துக
    புலி – குருளை
    சிங்கம் – பறழ்
    – குட்டி
20. உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக : இலவு காத்த கிளி போல

பிரிவு – II (மதிப்பெண்கள் : 10)

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்கவும் 5 × 2 = 10

21. முதல், இடை, கடை ஆகிய மூன்று இடங்களிலும் வரும் ஐகாரச் சொற்களைப் பயன்படுத்தி ஒரு சொற்றொடர் எழுதுக
22. மொழியின் வகைகள் யாவை ?
23. ஒரு வினைமுற்று திணை, பால், எண், இடம் காலம் ஆகியவற்றை உணர்த்துவதைச் சான்று தந்து விளக்குக.
24. ஒன்றொழி பொதுச்சொல் என்றால் என்ன ?
25. அடுக்குத் தொடருக்கும் இரட்டைக் கிளவிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைக் கூறுக
26. உனக்குத் தெரிந்த இரண்டு உவம உருபுகளைத் தொடரில் அமைத்து எழுதுக
27. மை – ஈற்றுப் பண்புப் பெயர்கள் நான்கினை எழுதுக

பிரிவு – III (மதிப்பெண்கள்: 50) பகுதி–1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும் : 2 × 5 = 10

28. அறுவகை வினாக்களும் இடம் பெறும் வகையில் ஒரு தொடர்ச்சியான உரையாடலை ஒருபக்க அளவில் அமைத்துக் காட்டுக
29. அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
    ஒழுக்க மிலான்கண் உயர்வு – இக்குறளில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக (அல்லது)
    சொற்பொருள் பின்வருநிலை அணியைச் சான்றுடன் விளக்குக
30. கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக
    ஈத லிசைபட வாழ்தல் அதுவல்ல
    தூதிய மில்லை உயிர்க்கு

பகுதி–2 2 × 5= 10

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்கவும் :

31. பரிதிமால் கலைஞரின் தமிழ்ப் பற்றினை விளக்குக
32. மெல்ல மெல்ல மற என்னும் சிறுகதையின் மையக்கருத்து மாறாமல் சுருக்கி எழுதுக
33. எம்.ஜி.இராமச்சந்திரன் பற்றிக் கட்டுரை எழுதுக

(திருப்புக

பகுதி–3 3+2=5

34. கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.
இந்த ஃபேஸ்புக்கும் வாட்ஸ் அப்பும் வந்தாலும் வந்தது, செல்போன்ல டே அண்ட் நைட்டா அதப் பாக்குறதிலேயே டைமெல்லாம் வீணாகுது.

(ஆ) கீழுள்ள தொடர்களில் உள்ள கோடிட்ட இடத்தை உரிய தமிழ் எண்களால் நிரப்புக
பெண்களின் ஏழு பருவங்களில்
மங்கைப் பருவம் ---------- (11 – 14) வயது வரை
மடந்தைப் பருவம் -------- (15 – 18) வயது வரை
அரிவைப் பருவம் -------- (19 – 24) வயது வரை
தெரிவைப் பருவம் -------- (25 – 29) வயது வரை

35. (அ) கீழ்க்காணும் ஆங்கில உரைப் பகுதியைத் தமிழாக்கம் செய்க : 3 + 2 = 5
Trees are very useful to us. They give us timber and firewood. The timber is used to make chairs, tables and other furniture. We get oil from the oil seeds of some trees. The leaves and fruits of some trees are used to prepare medicines.

(ஆ) கீழ்க்காணும் தமிழ்ப் பழமொழிகளில் எவையேனும் இரண்டினுக்கு இணையான தமிழ் பழமொழிகளை எழுதுக :
(i) Charity begins at home (ii) Diamonds cut diamonds (iii) Little strokes fell great oaks
(iv) Work is worship

பகுதி – 4

36. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றினுக்கு விடையளிக்கவும் : 1 × 5 = 5
(அ) கீழ்க்காணும் கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக
கண்ணனும் முகம்மதுவும் திரைப்படம் பார்த்துவிட்டு மாலை நேரத்தில் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கடந்து சென்ற வேனிலிருந்து ஒரு பெண்ணின் அலறல் சத்தத்தை இருவரும் கேட்கிறார்கள்........ அல்லது
(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக :
மத நல்லிணக்கம் அல்லது முதியோர் இல்லம்

பகுதி – 5

37. கீழ்க்காணும் பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களுள் ஏதேனும் ஐந்தினை எடுத்துஎழுதுக: 1 × 5=5

தேடிச் சோறுநிதம் தின்று - பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி – மனம்
வாடித் துன்பமிக உழன்று – பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து – நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி - கொடுங்
கூற்றுக்கு இரையெனப்பின் மாயும் – பல
வேடிக்கை மனிதரைப் போலே – நான்
வீழ்வேன் என்று நினைத்தாயோ ? – மகாகவி பாரதியார்

பகுதி – 6

38. அருள்மொழி என்பவர் வங்கிக் கணக்கில் 5000 ரூபாய் பணம் செலுத்த உள்ளார். தேர்வர் தன்னை அருள்மொழியாகப் பாவித்து, கொடுக்கப்பட்டுள்ள படிவத்தினைப் பூர்த்தி செய்க: 1 × 5 = 5

பகுதி – 7

39. (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து விடையளிக்க : 3 + 2 = 5
குமரனின் அப்பாவும், அம்மாவும் வெளியூரில் நடைபெறும் ஒரு திருமணத்திற்குப் போயிருக்கிறார்கள். அவன் மட்டும் வீட்டில் தனித்திருக்கிறான். அந்த நேரத்தில் அவனுடைய மாமா சில நண்பர்களோடு வருகிறார். வந்தவர்கள் வீட்டின் மொட்டை மாடிக்குச் சென்று அங்கு அமர்ந்து மது அருந்துகிறார்கள். புகை பிடிக்கிறார்கள். குமரன் இவற்றை எல்லாம் பார்க்கிறான். சற்று நேரங்கழித்து அவர்கள் புறப்படுகிறார்கள். புறப்படும்போது அவனுடைய மாமா, “அப்பா-அம்மா கிட்ட இங்கே நடந்தது எதையும் சொல்லக்கூடாது” என்று சொல்லி அவனிடத்தில் இருபது ரூபாயை நீட்டுகிறார்.
(i) குமரன் பணத்தை வாங்கலாமா ? கூடாதா ?
(ii) நீங்கள் குமரனாக இருந்தால் நடந்ததை அப்பா அம்மாவிடம் கூறுவீர்களா ? கூறமாட்டீர்களா ?
(iii) கூறுவீர்கள் என்றால் ஏன் கூறுவீர்கள் ? கூறமாட்டீர்கள் என்றால் ஏன் கூறமாட்டீர்கள் ?

(ஆ) கணிதப் பாடத்திற்குத் தனிப்பயிற்சி வகுப்பு முடித்து வீட்டுக்கு வரும். கவிதாவைத் தினமும் ஒருவன் கேலிசெய்கிறான். அவள் கண்டுகொள்ளாமல் தினமும் செல்கிறாள். அவனுடைய தொந்தரவு அதிகரித்து, கடைசியில் பின்தொடரவும் செய்கிறான். தன் அண்ணன்களிடம் இதைப்பற்றிக் கூறலாம் என்று நினைக்கிறாள் அவர்கள் வந்து அவனை அடித்துப் போட்டுவிட்டால், விபரீதம் ஆகிவிடுமே என்று பயப்படுகிறாள்.
(i) கவிதாவின் பயம் சரியா ?
(ii) நீங்கள் கவிதாவாக இருந்தால் என்ன செய்வீர்கள் ?

பிரிவு – IV (மதிப்பெண்கள் : 20) பகுதி – 1

40. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றினுக்கு விடையளிக்கவும் : 1 × 10 = 10
(அ) நும் ஊருக்குப் பேருந்து வசதி வேண்டும் எனப் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக (அல்லது)
(ஆ) நேரிலோ, தொலைக்காட்சியிலோ நீ கண்ணுற்று மகிழ்ந்த ஒரு விளையாட்டுப் போட்டியைப் பற்றி உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக

பகுதி – 2

41. கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு ஒருபக்க அளவில் கட்டுரை எழுதுக. தலைப்பு ஒன்று தருக. 1 × 10 = 10
(அ) சுற்றுச் சூழல் சீர்கேடு – காற்று மாசு – நீர் மாசு – நிலம் மாசு – ஒலி மாசு – தவிர்க்கும் முறைகளை – மாணவர் பங்கு (அல்லது)
(ஆ) பெண்கல்வி – பெண்ணுரிமை – சமுதாயத்தில் பெண்கள் நிலை – பெண்களுக்குச் சொத்துரிமை – பெண்விடுதலை - மணக்கொடை - பெண்கல்வியால் ஏற்பட்ட சமுதாய மாற்றங்கள்